## அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006.

## 2014– 2015–ஆம் கல்வி ஆண்டின் இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வுக்கு செய்முறை பயிற்சிக்கு பதிவு செய்வது தொடர்பான

## செய்திக்குறிப்பு

2014–2015–ஆம் கல்வி ஆண்டில் நடைபெறவுள்ள இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்விற்கு விண்ணப்பிக்கவுள்ள நேரடித் தனித்தேர்வர்களும் (முதன் முறையாக அனைத்துப் பாடங்களையும் தேர்வு எழுத இருப்பவர்கள்) / ஏற்கனவே 2012–க்கு முன்னர் பழையப் பாடத்திட்டத்தில் தேர்வெழுதி அறிவியல் பாடத்தில் தோல்வியுற்று, அறிவியல் செய்முறைப் பயிற்சி வகுப்பிற்கு பெயர் பதிவு செய்திராத தனித்தேர்வர்களும் அறிவியல் பாட செய்முறைப் பயிற்சி வகுப்பில் சேர பெயர்களை பதிவு செய்துக் கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

அனைத்து தனித்தேர்வர்களும் ஜுன் 2014, 11–ம் தேதி முதல் இம்மாத இறுதிக்குள் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகங்களில் தங்களின் பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும். மாவட்டக் கல்வி அலுவலரால் ஒதுக்கீடு செய்யப்பட்ட பள்ளிகளுக்குச் சென்று செய்முறை வகுப்புகளில் கலந்து கொள்ள வேண்டும். பயிற்சி வகுப்பில் 80 % வருகை தந்த தனித்தேர்வர்கள் மட்டுமே 2014–2015–ஆம் கல்வி ஆண்டில் பொதுத் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர்.

செய்முறை பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ளாத தேர்வரின் விண்ணப்பம் 2014–2015–ஆம் கல்வி ஆண்டில் நடைபெறவுள்ள இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்விற்கு ஏற்க இயலாமல் நிராகரிக்கப்படும்.

மேலும் கூடுதல் விவரங்களுக்கு சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகங்களைத் தொடர்பு கொள்ளுமாறு தேர்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதற்கான விண்ணப்பப் படிவத்தினை www.tndge.in என்ற இணையதளத்தில் 11.06.2014 முதல் 30.06.2014 வரை பதிவிறக்கம் செய்து, விவரங்களை பூர்த்தி செய்து இரண்டு நகல் எடுத்து சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களிடம் தனித்தேர்வர்கள் 30.06.2014–க்குள் நேரில் ஒப்படைத்தல் வேண்டும்.

ஒம்/–

**இயக்குநர்**

சென்னை – 6

நாள்: 09.06.2014

## 2014–2015–ஆம் கல்வியாண்டில் நடைபெறவுள்ள இடைநிலைக்கல்வி பொதுத்தேர்வில் கலந்துகொள்ள நடத்தப்பெறும் செய்முறை பயிற்சி வகுப்புகளில் சேர்தலுக்கான விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கான அறிவுரைகள்

1. தேர்வர் விண்ணப்பத்திலுள்ள அனைத்து கலங்களையும் தவறாது பூர்த்தி செய்தல் வேண்டும்.

2. இவ்விண்ணப்பப்படிவமானது இரண்டு படிவங்களில் பூர்த்தி செய்யப்படவேண்டும். செய்முறை வகுப்பிற்கான கட்டணத்தை தேசியமயமாக்கப்பட்ட ஏதேனும் ஒரு வங்கியில் அந்தந்தக் கல்வி மாவட்ட அலுவலரது பதவிப் பெயரில் பெற்று வங்கி வரைவோலை மற்றும் விண்ணப்பத்தை சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலகத்தில் நேரில் மட்டுமே ஒப்படைக்க வேண்டும்.

**<u>i. நேரடி தனித்தேர்வர்கள் :</u>**

3. கீழ்க்கண்ட கல்வித்தகுதிகளையுடைய தேர்வர்கள் மட்டுமே தேர்வெழுத அனுமதிக்கப்படுவர்.

அ) 2015, ஏப்ரல் மாதம் முதல் நாளன்று 14½ வயது பூர்த்தி செய்திருக்க வேண்டும். மத்திய/மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் 8–ம் வகுப்பு தேர்வில் ஆங்கிலத்துடன் தேர்ச்சி பெற்றுள்ள மாணவ/மாணவியரும் மற்றும் 9–ம் வகுப்பு பயின்று இடையில் நின்ற மாணவ/மாணவியரும், தேர்வுத்துறையால் நடத்தப்படும் எட்டாம் வகுப்பு (ESLC) பொதுத் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றவர்களும் இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வை எழுதலாம்.

ஆ) அனைவருக்கும் கல்வி இயக்ககத்தின் கல்வி காப்புறுதி திட்டத்தின்கீழ் பயின்று 8–ம் வகுப்புத் தேர்ச்சி பெற்றதாக மாற்று சான்றிதழ் பெற்றவர்கள்.

இ) உண்டு உறைவிடப்பள்ளியில் 8–ம் வகுப்புத் தேர்ச்சி பெற்றதாக மாற்றுச் சான்றிதழ் பெற்றவர்கள்.

ஈ) திறந்தவெளி பள்ளியில் ‘C’ Level சான்றிதழ் பெற்றவர்கள்.

உ) பள்ளிசாரா கல்வித் திட்டத்தின் கீழ் 8–ம் வகுப்புத் தேர்ச்சி பெற்றதாக மாற்றுச் சான்றிதழ் பெற்றவர்கள்.

ஊ) 14½ வயதை பூர்த்தி செய்த உழைக்கும் சிறார் கல்வி திட்டத்தின் கீழ் தொழிலாளர் அமைச்சகம் இந்திய அரசின்கீழ் வழங்கப்பட்ட பள்ளிசாரா கல்வி மாற்றுச் சான்றிதழ் பெற்றவர்கள்.

எ) ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தால் நடத்தப்பட்ட திறந்தவெளிப் பள்ளியில் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்கள் ஏப்ரல் முதல் தேதியன்று 14½ வயது பூர்த்தி செய்யும்பட்சத்தில் திறந்த வெளி பாடத் திட்டத்தில் தேர்வெழுதி தேர்ச்சி பெறாத பாடங்களை மட்டும் தனித்தேர்வர்களாக 2014–2015–ஆம் கல்வி ஆண்டில் நடைபெறவிருக்கும் இடைநிலைக்கல்வி பொதுத்தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம்.

**<u>ii. ஏற்கனவே தேர்வெழுதி தோல்வியுற்ற தனித்தேர்வர்கள் :</u>**

முந்தைய ஆண்டுகளில் பழைய பாடத்திட்டத்தில் இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வெழுதி அறிவியல் பாடத்தில் தோல்வியுற்று செய்முறைப் பயிற்சி வகுப்பிற்கு பெயர் பதிவு செய்திராத தனித்தேர்வர்கள் மேற்குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் பெயர் பதிவு செய்ய அறிவுறுத்தப்படுகிறார்கள்.

4. **சமீபத்தில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் அளவிலான வண்ண நிழற்படத்தை மட்டுமே ஒட்ட வேண்டும். கருப்பு வெள்ளையிலான நிழற்படத்தை ஒட்டக்கூடாது.**

**ஒம்/–**
**அரசுத் தேர்வுகள் இயக்குநர்**

Application for Enrollment to Practical Training Classes for the SSLC Public Examination to be held in the academic year 2014 - 2015
(This form should be submitted in Duplicate
to the respective District Educational Office)

Affix here
a recent
Passport Size
Photo

1. Name of the Applicant :
2. Father's Name/ Mother's Name/ Guardian's Name :
3. Sex :
4. Date of Birth :
5. Age as on 01.04.2015 :
6. Permanent Residential Address :
7. Address for Communication :
8. Educational Qualification :
9. Medium chosen for Practical Classes :
10. State whether Physically challenged. If so, mention the nature of physical challenge. :
11. Fee Particulars
    Amount Rs.125/- by cash :
12. Contact Phone Number :
13. Whether Self Addressed cover with Postal Stamp for Rs.5/- enclosed :

I do hereby declare that the particulars given above are true and to the best of my knowledge.

Signature of the Parent/Guardian

Signature of the Student

Place :
Date :

---

For Office Use only

Name of Practical Class Centre Allotted :

Seat Assistant Superintendent DEO

---

**RECEIPT**

**Received Rs.125/- (Rupees one hundred and twenty five only) from ………………………, (D.O.B.) …………… by cash towards SSLC March 2015 Science practical training fees.**

Signature with Office Seal

**2014–2015–ஆம் கல்வியாண்டில் நடைபெறவுள்ள இடைநிலைக்கல்வி பொதுத்தேர்வில் கலந்துகொள்ள நடத்தப்பெறும் செய்முறை பயிற்சி வகுப்புகளில் பதிவிற்கான விண்ணப்பம்.**
**(விண்ணப்பம் இரண்டு படிவங்களில் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலகங்களில் சமர்பிக்கப்பட வேண்டும்)**

சமீபத்தில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் அளவிலான நிழற்படத்தை ஒட்டவும்

1. தேர்வரின் பெயர் :
2. தாயார்/தந்தையார்/பாதுகாவலரின் பெயர் :
3. பாலினம் :
4. பிறந்த தேதி :
5. 01.04.2015 அன்றுள்ளபடி வயது :
6. நிரந்தர முகவரி :
7. அஞ்சல் முகவரி :
8. கல்வித் தகுதி :
9. செய்முறை வகுப்பில் பயில விரும்பும் மொழி :
10. மாற்றுத் திறனாளியாக இருப்பின் எவ்வகையைச் சார்ந்தவர் ? :
11. தேர்வுக் கட்டண விவரம்
    தொகை ரூ.125/– பணமாக செலுத்த
    வேண்டும்.
12. தொலைபேசி/கைபேசி எண். :
13. ரூ.5/–ற்கான சுயமுகவரியிடப்பட்ட அஞ்சல் உறை இணைக்கப்பட்டுள்ளதா ? :

மேலே தெரிவிக்கப்பட்ட தகவல்கள் யாவும் உண்மை என உறுதியளிக்கிறேன்.

பெற்றோர் / பாதுகாவலரின் கையொப்பம்

விண்ணப்பதாரரின் கையொப்பம்.
இடம் :
நாள் :

---

**அலுவலக உபயோகத்திற்கு மட்டும்**

ஒதுக்கீடு செய்யப்பட்ட செய்முறை வகுப்பிற்கான மையம்

இருக்கை உதவியாளர் கண்காணிப்பாளர் மாவட்டக்கல்வி அலுவலர்.

---

**<u>பற்றுச்சீட்டு</u>**

**ரூ.125/– (ரூபாய் நூற்றி இருபத்தைந்து மட்டும்) ........................................., (பிறந்த தேதி) ................................ என்பவரிடமிருந்து, மார்ச் 2015–ல் நடைபெறும் SSLC தேர்வு அறிவியல் செய்முறை பயிற்சிக்காக பணமாக பெறப்பட்டது.**

**கையொப்பம் மற்றும் அலுவலக முத்திரை**